1990 மார்ச் 20]

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தலைவரவர்களே, வீரப்ப நாயக்கம்பட்டி கூட்டுப்பள்ளம் ஏரியைக் கட்டும் திட்டம் பற்றி அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இது வீரப்பநாயக்கம்பட்டி, காட்பாடி, மாம்பாடி ஆகிய மூன்று கிராமங்களிலுள்ள பெரும் பகுதி விவசாய நிலங்களுக்கு நிலத்தடி நீரும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வாய்ப்பாகும். மேலும் இத்தகைய சிறு நீர்த்தேக்கங்களைப் பாசனத்திற்கு என்று விடாமல் அந்த நீர்த்தேக்கங்களைத் தேக்கி வைத்து, நிலத்தடி நீரும் உருவாக்கி அதன் மூலமாகப் பாசன, குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் அணுகுமுறையை அரசு கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையும், சிறப்பு ஆணையாளருடைய அறிக்கையும் அரசுக்குக் கிடைத்த பின், இது குறித்து அரசு முடிவு செய்யும்.

சின்னக்கரை ஓடைத் திட்டம்.

*7105—டாக்டர் த. சாந்தகுமாரி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாராபுரம் தொகுதி, சின்னக்கரை ஓடைத்திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: தாராபுரம் தொகுதி சின்னக்கரை ஓடை திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சின்னக்கரை ஓடைத்திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருந்தால் அது எவ்வளவு மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, சுமார் 355 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என் தொகுதியில் விவசாயத்திற்கும், குடிநீர்ப் பிரச்சினைக்கும் பெரும் உதவியாக அமையும் இந்தத்

திட்டத்தை நிறைவேற்ற ஒரு கால வரையறையை நிர்ணயித்து அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, சின்னக் கரை ஓடைத் திட்டம் பற்றிய செயற்குறிப்புகள் வடிவாய் திட்டம் வளர்ச்சித் துறையிடமிருந்து இந்த அரசுக்கு இன்னும் அறிக்கை வர வேண்டியிருக்கிறது. அரசுக்கு அறிக்கை வந்த பிறகு, அரசினுடைய நிதி ஒதுக்கலுக்குப் பிறகு விரைந்து எப்பொழுது முடிக்கப்படலாம் என்று தெரிவிக்க முடியும்.

மருதம்புத்தூரில் குடிநீர் வழங்கல்

*2058—திரு. பி. எச். பாண்டியன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பா சமுத்திரம் தாலுகாவில் உள்ள மருதம்புத்தூரில் குடிநீர் வடி கால் வாரியம் மூலம் 10 குதிரை சக்தி திறன் உள்ள மோட்டார் இணைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மருதம்புத்தூர் என்ற கிராமம் 4,000 மக்கள் வாழக்கூடிய கிராமம் ஆகும். அங்கே வீதிகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் முன்பு கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரை மேல்நிலைத் தொட்டிகளில் ஏற்றி ஓரிரு இடங்களுக்கு மட்டும் விநியோகிக்கிறார்கள். ஆகவே, எல்லாத் தெருக்களுக்கும் தண்ணீர் வழங்கக்கூடிய திட்டத்தை வகுப்பார்களா அமைச்சரவர்கள் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கிராமத்தில் 1985–86–இல் குடிநீர் வழங்குவதற்காக 5.21 இலட்சம் செலவிலே திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அப்பொழுது நிறைவேற்றப்பட்ட அந்தத் திட்டத்தில் நீர் ஆதாரம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் நிறைவேற்றப்பட்டது.